Class – IX
2014 -2015

Subject – Tamil

# International Indian School- Dammam
## Worksheet - I Term
## இலக்கணம்

| எழுத்து | ஆகு பெயர் | பெயர்ச்சொல் |
|---|---|---|
| இலக்கணக் குறிப்பு தருக.<br>1. உழா அர்<br>2. கெடுப்பதூஉம்<br>3. குடிதழீ இ<br>4. கலங்ங்கு<br>5. கண்ண் கருவினை<br>6. விடங்ங்க் கலந்தானை<br>7.எஃஃகிலங்கிய<br>8. இலஃஃகு<br>9. தொழாஅள்<br>10. நடுவொரீ இ | இலக்கணக்குறிப்பு தருக.<br>1. ஒன்று பெற்றால் ஒளி மயம்<br>2. ஐந்து கிலோ என்ன விலை?<br>3. நான்கு லிட்டர் தேவை<br>4. மூன்று மீட்டர் கொடு<br>5. வள்ளுவர் சொல் வாழ்க்கைக்கு இனிது.<br>6. பாலை இறக்கு<br>7. ஊர் கூடியது<br>8. யாழ் கேட்டு மகிழ்ந்தேன்<br>9. நான் சமையல் கற்றேன்<br>10. வீணை கேட்டு மெய் மறந்தேன்<br>11. திருவள்ளுவரைப் படித்துப்பார்<br>12. நாரதர் வருகிறார். | இலக்கணக்குறிப்பு தருக.<br>1. கோடல்<br>2. கபிலனுக்கு அடி விழுந்தது<br>3. அறிவறிந்த மக்கட் பேறு<br>4. முருகன் பரிசு பெற்றான்<br>5. வந்தான்<br>6. செம்மை<br>7. கூம்பு<br>8. கிலோ மீட்டர்<br>9.புளிப்பு<br>10. சூடு |
| **சொல் - பகாப்பதம், பகுபதம்** | **வழா நிலை, வழு, வழுவமைதி** | **வழா நிலை, வழு, வழுவமைதி** |
| இலக்கணக்குறிப்பு தருக.<br>1. காண்     2. மரம்<br>3. மன்     4. கடி<br>5. கரியன்     6. பொன்னன்<br>7. ஊரான்     8. காணான்<br>9. இல், ஆல், ஆ     10. செய்தான்<br>11. ஆன்     12. கின்று, ஆநின்று<br>13. த்,ட்,ற்,இன்     14. ப்,வ். | இலக்கணக்குறிப்பு தருக.<br>1. மாடு வந்தது<br>2. கண்ணன் வந்தான்<br>3. நீ வருவாய்<br>4. நாளை வருவேன்<br>5. தமிழ் இலக்கணம் எத்தனை வகைப்படும்?<br>6. செய்வாயா? என்ற கேள்விக்கு செய்வேன் என்ற விடை<br>7. என் அத்தை வந்தது.<br>8. கண்ணன் வந்தாள்<br>9. அவர்கள் வந்தோம் | இலக்கணக்குறிப்பு தருக.<br>10. கரிகாலன் நாளை வந்தான்<br>11. முட்டையிட்டது சேவலா? பெட்டையா?<br>12. சாப்பிட்டாயா? எனற கேள்விக்கு, என் மாமா வருகிறார் எனக் கூறுதல்.<br>13. நாய் கத்தும்<br>14. பசுவைப் பார்த்து 'என் இலட்சுமி வந்து விட்டாள்' எனக் கூறுதல். |

இலக்கணம் - எழுத்து

நிரப்புக.

1. ஒருவர் தம் கருத்தை வெளியிடவும், அதைக் கேட்போர் புரிந்து கொள்ளவும் கருவியாக அமைவது ________

2. ஒரு மொழியைப் பிழையின்றிப் பேசவும் எழுதவும் துணை செய்வது ___________ ஆகும்.

3. இலக்கணம் _______________ வகைப்படும்.

4. இலக்கணத்தின் வகைகள் _____________, _______________, …………

5. தமிழ் எழுத்துக்களின் எண், பெயர், முறை, பிறப்பு, உருவம், மாத்திரை, முதல், ஈறு, இடைநிலை, போலி, பதம், புணர்ப்பு எனும் பன்னிரு பகுதிகளையும் விளக்கிக் கூறுவது ____________ ஆகும்.

6. உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டும், மெய்யெழுத்துக்கள் பதினெட்டும் ஆகிய முப்பது எழுத்துக்களும் ____________ ஆகும்.

7. முதல் எழுத்துக்களாகிய உயிர் எழுத்துக்களையும், மெய்யெழுத்துக்களையும் சார்ந்து இயங்கும் எழுத்துக்கள் _____________ எனப்படும்.

8. சார்பெழுத்துக்களின் வகைகள் _______ பகுப்பர். அவை, _________, ________,…………..

9. செய்யுளில் ஓசை குறையும் போது அவ்விடத்திலுள்ள எழுத்தோடு அதன் இன எழுத்தைச் சேர்த்து, ஓசையை நிறைவு செய்வது __________ (அல்லது) இருக்கும் அளவைக் காட்டிலும் மிகுந்து ஒலிக்கச் செய்வது ______________ ஆகும்.

10. உயிரெழுத்தைக் கொண்டு ஓசையை நிறைவு செய்தால், அதனை _____________ என்பர்.

11. மெய்யெழுத்தைக் கொண்டு ஓசையை நிறைவு செய்தால் அது _______________ ஆகும்.

12. உயிரளபெடையின் வகைகள் _____________, ……..

13. செய்யுளில் ஓசையை நிறைவு செய்தற் பொருட்டு, சொல்லின் முதல், இடை, கடையிலுள்ள உயிர் நெடில் எழுத்துக்கள் அளபெடுத்து வருவது __________ ஆகும். இதனை _____ என்றும் வழங்குவர்.

14. 'உழாஅர்' ______________ அளபெடை.

15. செய்யுளில் ஓசை குறையாத பொழுதும், செவிக்கு இனிய ஓசையைத்தரும் பொருட்டு உயிர்க்குறில் நெடிலாகி, மேலும் அளபெடுப்பது _________ எனப்படும்.

16. 'கெடுப்பதூஉம்' _______________ அளபெடை.

17. செய்யுளில் ஓசை குறையாத பொழுதும், பெயர்ச் சொல்லை வினைச்சொல்லாக மாற்றும் பொருட்டு அளபெடுத்தலை ____________ என்பர்.

18. 'குடிதழீஇ' _____________ அளபெடை.

19. செய்யுளில் ஓசை குறையும் பொழுது அதனை நிறைவு செய்வதற்குச் சொல்லிலுள்ள மெய்யெழுத்து அளபெடுத்தலை ____________ என்பர்.

20. 'கலங்ங்கு' ____________ அளபெடை.

21. எழுத்துக்கள் தோன்றுவதற்கு அடிப்படை காரணமாயிருப்பவை ______________ ஆகும்.

22. உயிரின் முயற்சியால், உடம்பினுள் இருக்கும் காற்றினால் எழுப்பப்படுவது _______________.

23. தமிழ் எழுத்துக்களான முதலெழுத்து, சார்பெழுத்து ஆகியவற்றின் பிறப்பை _________, ________ என இருவகையாகப் பிரிக்கலாம்.

24. எழுத்து தோன்றுகின்ற மார்பு முதலானவற்றை __________ என்று கூறுவர்.

25. எழுத்து தோன்றுகின்ற உதடு முதலிய உறுப்புகளின் தொழில் வேறுபாட்டினால் ஒலிப்பதை ________________ என்று கூறுவர்.

26. மெய்யெழுத்துக்கள் ஒலிக்கும்போது ஏற்படும் மூன்றுவித வேறுபாட்டொலிகள் _____________, ______________, ________________.

27. உயிரெழுத்துக்கள் பன்னிரண்டும், மெய்யெழுத்துக்களுள் இடையின எழுத்துக்கள் ஆறும், ____________ பிறக்கின்றன.

28. மெல்லின எழுத்துக்கள் ஆறும் ____________ பிறக்கின்றன.

29. வல்லின எழுத்துக்கள் ஆறும் ___________ பிறக்கின்றன.

30. அ, ஆ, இவை ___________ தோன்றுகின்றன.

31. வாயைத்திறத்தலோடு, மேல் வாய்ப்பல்லை நாக்கினடியின் ஓரங்கள் தொடுவதால் தோன்றும் எழுத்துக்கள் _____

32. உதடுகளைக் குவித்து ஒலிப்பதால் உண்டாகும் எழுத்துக்கள் ____________

33. முதல் நா, முதல் அண்ணத்தைத் தொடுதலால் தோன்றும் எழுத்துக்கள் ____________

34. இடை நா, இடை அண்ணத்தைத் தொடுதலால் தோன்றும் எழுத்துக்கள் ____________

35. நுனி நாக்கு மேல்வாயின் நுனியைத் தொடுதலால் தோன்றும் எழுத்துக்கள் ___________

36. மேல் வாய்ப் பல்லினடியை நாவின் ஓரங்கள் தடித்து நெருங்குவதால் பிறக்கும் எழுத்துக்கள் ___________

37. மேலுதடும் கீழுதடும் பொருந்துவதால் தோன்றும் எழுத்துக்கள் ____________

38. நாக்கின் அடி, மேல்வாயின் அடியைப் பொருந்துதலால் தோன்றும் எழுத்துக்கள் ___________

39. மேல்வாய்ப் பல்லினடியை நாவின் ஓரங்கள் தடித்து நெருங்குதலால் பிறக்கும் எழுத்துக்கள் ___________

40. மேல் வாயை நாவின் ஓரங்கள் தடித்துத் தடவுவதால் பிறக்கும் எழுத்துக்கள் _______________

41. மேல்வாய்ப் பல்லைக் கீழுதடு பொருந்துவதால் பிறக்கும் எழுத்துக்கள் _______________

42. மேல்வாயை நாக்கின் நுனி மிகவும் பொருந்துவதால் பிறக்கும் எழுத்துக்கள் _______________

43. சார்பெழுத்துக்களுள் ஒன்றாகிய _______________ எழுத்து, தலையை இடமாகக் கொண்டு பிறக்கிறது. வாயைத் திறந்து ஒலித்தலே இதன் _________ பிறப்பு ஆகும்.

44. சார்பெழுத்துக்களின் இடப்பிறப்பு _________ எழுத்துக்களின் இடப்பிறப்பே ஆகும்.

45. உயிர் நெடில் எழுத்துக்கள் _______________லிருந்து பிறக்கின்றன.

**நிரப்புக.**

**சொல் - பகாப்பதம், பகுபதம்**

1. இடைச்சொற்கள் ________ பதம் ஆகும்.
2. பகுபதத்தில் குறைந்த அளவு இருக்க வேண்டிய உறுப்புகள் _______________
3. ஏவல் வினையாக அமைவது _____ ஆகும்.
4. 'இல்' என்னும் எதிர்மறை இடைநிலை அமைந்துள்ள வினைச்சொல் ____________
5. ஓர் எழுத்து தனித்தேனும், ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துக்கள் தொடர்ந்தேனும் ஒரு பொருளை உணர்த்துமானால், அது ____________ எனப்படும்.
6. சொல் என்பதன் வேறு பெயர்கள்_________
7. ஓடினான் என்பதில் 'ஓடு' என்பது ________
8. உண்+ட்+அன்+அன் என்பதில் கோடிட்ட இடத்தில் உள்ள 'அன்' என்பது ____________

**ஆகு பெயர்**

**நிரப்புக.**

Class – IX Subject – Tamil
2014 -2015

1. தயிரை இறக்கு. இத்தொடர் _______________ ஆகும்.
2. ஒரு பொருளின் பெயர் தனக்குரிய பெயரைக் குறிக்காமல் தன்னோடு தொடர்புடைய வேறொரு பொருளுக்குத் தொன்று தொட்டுப் பெயராகி வருவது ________________ ஆகும்.
3. கம்பர் படிக்கிறேன் என்பது __________ ஆகும்.
4. தானம் தானிக்கு (அ) இடம், பொருளுக்கு ஆகி வருவது ____________
5. தானி தனத்திற்கு (அ) பொருள், இடத்திற்கு ஆகி வருவது ______________
6. காரியப் பொருள் கருவிப் பொருளுக்கு ஆகி வருவது _____________
7. கருவிப் பொருள் காரியத்திற்கு ஆகி வருவது _____________
8.'நாலுமிரண்டும் சொல்லுக்கு உறுதி'. இத்தொடர் ________ ஆகும்.

**<u>பெயர்ச்சொல்</u>**

**<u>நிரப்புக.</u>**

1. பகுதி மட்டும் தொழிலைக் குறிப்பது ________________
2. வினையாலணையும் பெயர் வேற்றுமை உருபுகளை _______________ வரும்.
3. மாட்சி என்பது _________________ ஆகும்.
4. காட்சி என்னும் தொழிற்பெயர் ________________ எனப்பிரியும்.
5. 'வந்தான்' என்னும் வினைமுற்று _____________என வினையாலணையும் பெயராய் முடியும்.
6. 'யான்' என்னும் தன்மை ஒருமைப் பெயர் வேற்றுமை உருபேற்கும் போது _________ எனத்திரியும்.
7. 'நீர்' என்னும் முன்னிலைப் பன்மைப் பெயர் வேற்றுமை உருபேற்கும் போது ________ எனத்திரியும்.
8. 'தான்' என்னும் படர்க்கை ஒருமைப் பெயர் வேற்றுமை உருபேற்கும் போது, _________ என மாறும்.

**<u>நிரப்புக.</u>**

**<u>வழா நிலை, வழு, வழுவமைதி</u>**

1. இலக்கணமுறைப்படி குற்றமில்லாது பேசுவதும் எழுதுவதும் ______________ ஆகும்.
2. இலக்கண முறையின்றிப் பேசுவதும் எழுதுவதும் ________ எனப்படும்.
3. வழா நிலை _______ வகைப்படும்.
4. வழு ______________ வகைப்படும்.
5. பெண்பாற் பெயர், ஆண்பால் வினை கொண்டு முடிந்தால் _______ எனப்படும்.
6. உயர்திணைப் பெயர் அஃறிணை வினைகொண்டு முடிவடைந்தால் ________ ஆகும்.
7. தன்மையிடத்துப் பெயர் படர்க்கையிடத்துப் பெயரைக்கொண்டு முடிவடைந்தால் _______ ஆகும்.
8. கேட்கப்படும் வினாவிற்கு பொருத்தமில்லாத விடை கூறினால் ______ ஆகும்.
9. பொருத்தமில்லாத வினாவைக் கேட்டால் _____________ எனப்படும்.
10. முறையற்ற ஒலி மரபைக் கூறினால் _______ எனப்படும்.
11. இலக்கண முறைப்படி குற்றமுடையது எனினும், இலக்கண ஆசிரியர்களால் குற்றமன்று என்று ஏற்றுக்கொள்ளப்படுவது _________ ஆகும்.
12. எதிர்காலப் பெயரோடு இறந்தகால வினை வந்தால் __________ ஆகும்.

Class – IX Subject – Tamil

2014 -2015

I. கடிதம்

1. பேருந்து வசதி வேண்டிப் போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநருக்குக் கூட்டு விண்ணப்பம் எழுதுக.
2. குடிநீர் வசதி வேண்டி ஊராட்சி ஒன்றிய ஆணையருக்குக் கூட்டு விண்ணப்பம் எழுதுக.
3. நீ கண்டு களித்த இடம் குறித்து, உன் நண்பனுக்குக் கடிதம் எழுதுக.
4. பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வில் முதல் மதிப்பெண் பெற்ற உன் நண்பனைப் பாராட்டிக் கடிதம் எழுதுக.
5. வெள்ளத்தில் மூழ்கிய சிறுவனைக் காப்பாற்றியமைக்காக அண்ணா விருது பெற்ற உன் நண்பனைப் பாராட்டிக் கடிதம் எழுதுக.
6. உன் ஊரில் நூலக வசதி வேண்டி பொது நூலகத்துறை இயக்குநருக்குக் கூட்டு விண்ணப்பம் வரைக.
7. தொலைத்துவிட்ட பொருளைக் கண்டுபிடித்துத் தரக் கோரிக் காவல் துறை ஆய்வாளருக்கு முறையீட்டுக் கடிதம் எழுதுக.

II. கட்டுரை

1. 'ஆழிப்பேரலை' குறித்து கட்டுரை எழுதுக.
2. 'காலத்தை வெல்லும் கணினி' பற்றி ஒரு கட்டுரை வரைக.
3. நான் விரும்பும் நூல் என்ற தலைப்பில் உனக்குப் பிடித்த நூல் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.
4. 'சுற்றுச்சூழல் பாதுகாப்பு' பற்றி ஒரு கட்டுரை வரைக.
5. மழை நீர் சேகரிப்பு குறித்து ஒரு கட்டுரை வரைக.
6. 'நான் விரும்பும் கவிஞர்' என்ற தலைப்பில் பாரதியார் பற்றி ஒரு கட்டுரை வரைக.
7. சேமிப்பின் அவசியம் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.
8. 'அனைவருக்கும் கல்வி' குறித்து ஒரு கட்டுரை எழுதுக.

III. அறிக்கை

1. கண்தான முகாம் பற்றிய அறிக்கை ஒன்று எழுதுக.
2. உன் ஊரில் நடைபெற்ற இரத்த தான முகாம் குறித்து ஒரு அறிக்கை எழுதுக.
3. உன் பள்ளியில் நடைபெற்ற 'செஞ்சிலுவைச் சங்கமுகாம்' பற்றி ஒரு அறிக்கை எழுதுக.
4. உன் ஊரில் நடைபெற்ற அறிவியல் மற்றும் கலைப்பொருள் கண்காட்சி குறித்து ஒரு அறிக்கை எழுதுக.
5. உன் பள்ளியில் நடைபெற்ற முத்தமிழ் மன்ற விழா குறித்து ஒரு அறிக்கை எழுதுக.
6. உமது பள்ளியில் நடைபெற்ற சிறு சேமிப்பு முகாம் பற்றி அறிக்கை ஒன்று எழுதுக.
7. உமது பகுதியில் நடைபெற்ற 'சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு முகாம்' குறித்து அறிக்கை ஒன்று எழுதுக.

************